**தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 2 - 2020**

தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 2 இன் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. ஏற்கனவே செயற்படும் மாத்தறை தொடக்கம் அம்பாந்தோட்டை வரையான தெற்கு அதிவேகப்பாதையினை (கொழும்பு தொடக்கம் மாத்தறை) விஸ்தரிப்பதனூடாக முன்மொழியப்பட்ட அம்பாந்தோட்டை சர்வதேச மைய அபிவிருத்தி செயற்திட்டம், அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகம் மற்றும் சர்வதேச விமான நிலையம் (மத்தளை) போன்றவற்றை இனைத்தல் செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் பகுதி 02 இன் கீழான பெலியட்ட தொடக்கம் வெட்டியா இலிருந்தான தெற்கு அதிவேகப்பாதையின் 26 கிலோமீற்றர் இனை நீடிப்பதற்காக மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 60,601.60 மில்லியனாக உள்ளதுடன், அதில் 85 சதவிகிதமான ரூபா 46,920 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 360.29 மில்லியனை சிவில் மற்றும் ஆலோசனை சேவைக்காக நிதியளிப்புச் செய்வதற்கு சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி இணங்கியிருந்தது. மிகுதி 15 சதவிகிதம் ஐ.அ.டொலர் 63.58 மில்லியன் இலங்கை ஹட்டன் தேசிய வங்கியினால் நிதியளிக்க உடன்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் பகுதி 02 இன் கீழான நடவடிக்கைகள் 2016 ஒக்டோபர் 28 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 ஒக்டோபர் 27 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பிற்காக செலுத்தப்பட வேண்டிய தாமத வட்டிக்கான ஏற்பாடு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இன் பிரகாரம் செய்யப்பட்டிருக்கவில்லை. | அனைத்து காணி சுவீகரிப்புடன் தொடர்புபட்ட வேலைகளின் அமுல்படுத்தல் எஸ்பிடி யினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டது. அதன்படி ஈஎஸ்ஈபி பிரிவு 02 செயற்திட்ட அலுவலகம் காணி சுவீகரிப்பிற்கான எவ்வித நிதி அதிகாரத்தினையும் ஒப்படைத்திருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இன் பிரகாரம் ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதிநிலமைக்கூற்றில் காட்டப்பட்டிருந்த ரூபா 9.09 மில்லியன் தொகையான தீர்க்கப்படாத பிடிகாசு செயற்திட்டத்திற்கான காணி சுவீகரிப்பு மீதான பிடிகாசிற்காக ஓர் பதிவேடு பராமரிக்கப்படாததன் காரணமாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது. | அனைத்து காணி சுவீகரிப்புடன் தொடர்புபட்ட வேலைகளின் அமுல்படுத்தல் எஸ்பிடி இனுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டது. அதன்படி ஈஎஸ்ஈபி பிரிவு 02 செயற்திட்ட அலுவலகம் காணி சுவீகரிப்பிற்கான எவ்வித நிதி அதிகாரத்தினையும் ஒப்படைத்திருக்கவில்லை. | செயற்திட்டத்திற்கான காணி சுவீகரிப்பு மீதான பிடிகாசிற்காக பதிவேடு பராமரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 14.8 இன் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்ட இடைக்கால கொடுப்பனவு பத்திரத்திற்கான கொடுப்பனவின் மீதான தாமதத்தின் மீது ஒப்பந்ததாரரிற்கு ரூபா 31.65 மில்லியன் நிதிக்கட்டணங்கள் செலுத்த வேண்டியிருந்தும், சாத்தியமான பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் அங்கீரிக்கப்படவோ அல்லது வெளிப்படுத்தப்பட்டிருக்கவோ இல்லை. | முடிவுறுத்தல் நிதிக்கூற்றுக்களில் இப்பொறுப்பினை அங்கீகரிக்க கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இன் பிரகாரம் ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல 02 இன் பிரகாரம் செயற்பாட்டு மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட காசு உற்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் அடையாளப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உடன்பட்டனர். | காசுப்பாய்ச்சல் கூற்று இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல 02 இன் பிரகாரம் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2.2 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

| இல | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ஒப்பந்த குறித்த நிபந்தனைகளின் உபபிரிவு 21.4 | ஒப்பந்ததாரரினால் இறக்குமதி செய்யப்பட்ட சிவில் வேலைகளிற்காக பயன்படுத்தப்பட வேண்டிய உபகரணம், இயந்திரம், வாகனங்கள், மூலப்பொருட்கள், அனைத்து உதிரிப்பாகங்கள் மற்றும் அனைத்து ஏனைய நுகரத்தக்கவைகள் என்பன சுங்க தீர்வைகளிலிருந்து விலக்களிக்கப்படுவதுடன் அவ் உருப்படிகள் செயற்திட்ட முடிவில் ஒப்பந்ததாரரினால் மீள ஏற்றுமதி செய்யப்படல் வேண்டும். இருப்பினும் செயற்திட்டமானது 2020 பெப்ரவரி 25 இல் கணிசமான அளவு பூர்த்திசெய்யப்பட்டு அதன்படி குறைபாட்டு நிபர்த்திகாலப்பகுதி கூட 2021 பெப்பரவரி 24 இல் பூர்த்தியடைந்திருந்தும் 66 பட்டியல்களில் 02 பட்டியல்களின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட உருப்படிகள் மாத்திரமே 2021 நவம்பர் 09 இலான கணக்காய்வு திகதியிலுள்ளவாறு மீள ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது. | தீர்வைகள் மற்றும் வரிகளின் மீளப்பெறலிற்கான செயன்முறையானது கோவிட் 19 நோய்த்தொற்று பரவலின் விளைவு காரணமாக தாமதமடைந்திருந்தது. இருப்பினும் செயன்முறையை துரிதப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | செயன்முறையை துரிதப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 | உரிய ஒப்பந்ததாரரிடமிருந்து செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்திற்கான கிரயத்தினை மீளப்பெறாமல், செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்திற்கான கிரயத்தினை மீளப்பெற ஒப்பந்ததாரரினை அனுமதிப்பதனூடாக வீதி புனரமைப்பு வேலைகளின் கீழான பீஓகியுவ் களில் ஓர் தனியான கொடுப்பனவு உருப்படி செய்யப்பட்டிருந்தது. அதன்படி செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்திற்கான கிரயத்தினை மீளப்பெற 2020 திசெம்பர் 31 வரை கூட்டுமொத்தம் ரூபா 455 மில்லியன் ஒப்பந்ததாரிற்கு செலுத்தப்பட்டிருந்தது. மேற்கூறிய கொடுப்பனவானது பீஓகியுவ் ஏற்பாட்டினை ரூபா 230.17 மில்லியனால் மிஞ்சியிருந்ததுடன் | செயலாற்றல் பாதுகாப்பு பத்திரம் அவரது சொந்த செலவில் வழங்கப்படும் என்பதன் அர்த்தம் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தின் சமர்ப்பிப்பு ஒப்பந்த பீஓகியுவ் இன் பீஎஸ் உருப்படி 107(2) இன் கீழ் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தின் கிரயத்தினை மீளப்பெற ஒப்பந்ததாரர் உரித்தானதன் பின்னர் இருதரப்பினர்களிடையேயும் ஓர் ஒப்பந்தத்திற்குள் உள்வாங்குவது ஓர் முன் நிபந்தனை என சீஓசீ கூறுகின்றது. பீஎஸ் இனை வழங்குவதற்காக உண்மையான கிரயம் ஒப்பந்த | அளவைப்பட்டியலின் பரிசீலனை விலைமனு ஆவணங்களை வழங்குவதற்கு முன்னர் பெறுகை நிபுணர்கள் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் செய்யப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| ஒப்பந்ததாரரிற்கு தேவையற்ற நன்மைகளை வழங்கியிருந்தமையும் மேலும் அவதானிக்கப்பட்டது. | பூர்த்தியாக்கலிற்காக அதனடுத்த காலநீடிப்பு காரணமாக அதிகரித்திருந்தது. |

## 3. பௌதீக முன்னேற்றம்

### 3.1 காணி சவீகரிப்பு செயன்முறையின் செயலாற்றல்

| இல | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | காணி சுவீகரிப்பு செயன்முறையானது 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 26 வாரங்களிற்குள் காணி நடவடிக்கைகளை துரிதப்படுத்தி விவைபடுத்துவதற்காக கூட்டு மொத்தம் ரூபா 14.82 மில்லியன் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் நிலஅளவை திணைக்களத்தின் அமைச்சு, மதிப்பீட்டு திணைக்களம் மற்றும் பிரதேச செயலக அலுவலகம் போன்றனவற்றின் உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தும் காணி சுவீகரிப்பு செயன்முறை இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. | அனைத்து காணி சுவீகரிப்புடன் தொடர்புபட்ட வேலைகளின் அமுல்படுத்தல் எஸ்பிடி இனுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டது. அதன்படி ஈஎஸ்ஈபி பிரிவு 02 செயற்திட்ட அலுவலகம் காணி சுவீகரிப்பிற்கான எவ்வித நிதி அதிகாரத்தினையும் ஒப்படைத்திருக்கவில்லை. | காணி சுவீகரிப்பு செயன்முறையினை விரைவுபடுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,868.69 மில்லியன் காணி சுவீகரிப்பு மீதான இழப்பீடாகவும் ரூபா 145.65 மில்லியன் தாமத வட்டியாகவும் செலுத்தப்பட்டிருந்தும் காணித்துண்டுகளின் எண்ணிக்கைக்கான உரிய விபரங்கள் கணக்காய்விற்காக காணப்பட்டிருக்கவில்லை. | அனைத்து காணி சுவீகரிப்புடன் தொடர்புபட்ட வேலைகளின் அமுல்படுத்தல் எஸ்பிடி இனுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டது. அதன்படி ஈஎஸ்ஈபி பிரிவு 02 செயற்திட்ட அலுவலகம் காணி சுவீகரிப்பிற்கான எவ்வித நிதி அதிகாரத்தினையும் ஒப்படைத்திருக்கவில்லை. | காணி சுவீகரிப்பு செயன்முறையினை விரைவுபடுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 245.1147 ஹெக்டயர்களில் விஸ்தரிக்கப்பட்ட 2,884 காணித்துண்டுகள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் செயற்திட்டமானது மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கூட காணி சுவீகரிப்பு சட்டத்தின் உபபிரிவு 44 இன் பிரகாரம் 3.0152 ஹெக்டயர்களில் விஸ்தரிக்கப்பட்ட 18 துண்டுகளிற்கான உரிமையினை மாத்திரமே வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றக்கூடியதாக இருந்தது. | அனைத்து காணி சுவீகரிப்புடன் தொடர்புபட்ட வேலைகளின் அமுல்படுத்தல் எஸ்பிடி இனுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டது. அதன்படி ஈஎஸ்ஈபி பிரிவு 02 செயற்திட்ட அலுவலகம் காணி சுவீகரிப்பிற்கான எவ்வித நிதி அதிகாரத்தினையும் ஒப்படைத்திருக்கவில்லை. | காணி சுவீகரிப்பு செயன்முறையினை விரைவுபடுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| சேவைப்பிரிவின் இரண்டு இடங்கள் சாத்தியவள அறிக்கையின் அத்தியாயம் 8.33 இல் கூறப்பட்டிருந்தும் அது மதிப்பிடப்பட்டிருக்காததுடன் பீஓகியுவ் ஏற்பாடுகள் அனைத்து தெற்கு அதிவேகப்பாதையின் விஸ்தரிப்பிற்குமான சேவை நிலையத்தை நிர்மானிக்க செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே தெற்கு அதிவேகப்பாதையின் 46 கி.மீகளின் பின்னர் நெடுஞ்சாலைப் பயன்பாட்டாளர்களிற்காக எவ்வித சேவைப்பிரிவும் காணப்படவில்லை. | எவ்வித ஈஎஸ்ஈபி ஒப்பந்த பீஓகியுவ் உம் நிர்மான கட்டத்தில் சிவில் வேலைகள் ஒப்பந்தங்களினூடாக சேவை பகுதிகளை நிர்மானிக்க ஏற்பாடுகள் செய்திருக்கவில்லை. | சேவைப்பிரிவினை வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |